**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.73/2024 & SC.No.206/2024 - PW- 7**

| | |
|---|---|
| Name | திரு. கோபிநாத் |
| Husband/Father Name | பாலகிருஷ்ணன் |
| Village /Area | காஞ்சிபுரம் |
| Taluk | காஞ்சிபுரம் |
| Occupation | கிராம நிர்வாக அலுவலர் |
| Age | 39 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 28.10.2025.

**(எதிரிகள் 1 முதல் 4 வரை ஆஜர். எதிரி 6 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது நெமிலி தாலுக்கா, திருமால்பூரில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2020 ம் ஆண்டு மே 22 அன்று கீழ்வெங்கடாபுரம் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்த போது காலை 06.00 மணியளவில் கீழ்வெங்காடபுரம் கிராம உதவியாளர் எனக்கு கைப்பேசியில் தொடர்பு கொண்டு கீழ்வெங்காடாபுரம் ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு அருகே உள்ள சாயனாபுரம் கிராமத்தை சேர்ந்தவரை ரைஸ் மில் அருகே ஒரு நபர் இறந்து கிடப்பதாக தகவல் தெரிவித்தார்.

மேலும் நான் வரும் போதே எனக்கு இறந்து கிடந்த நபர் தனஞ்செழியன் மகன் பாரதிதாசன் என தெரியவந்தது. சம்பவ இடத்திற்கு வந்த பிறகு எனது உயர் அதிகாரிகளுக்கும் காவல் துறைக்கு தகவல் அளித்தேன். அந்த இடத்திற்கு காவல் துறையினர்

வந்து இறந்து கிடந்தவரின் உடலை மருத்துவமனைக்கு எடுத்துசென்றனர்.

இது சம்பந்தமாக வட்டாட்சியர் அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்தேன். 24.05.2020 அன்று காவல் துறையில் இருந்து எனக்கு தொலைபேசி அழைப்பு விடுத்து என்னை ஆட்டுப்பாக்கம் பேருந்து நிறுத்தத்திற்கு வருமாறு அழைத்தனர். நானும் கிராம உதவியாளரும் அங்கு சென்றோம். அந்த இடத்தில் கீழ்வெங்கடாபுரத்தை சேர்ந்த தமிழ்செல்வம், சேதுபதி, ஆனந்தக்குமார் ஆகியோர்கள் போலீசார் விசாரித்துக்கொண்டிருந்தனர்.

மேற்படி 3 நபர்களும் போலீஸ் விசாரணையின் போது எங்கள் முன்னிலையில் இறந்த பாரதிதாசனும் அவர்களும் நண்பர்கள் என்றும் அவர்களுக்குள் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக பாரதிதாசன் என்பவரை வெளியூரில் இருந்து வரைவழைத்து மது அருந்தும் போது அவரை கொலை செய்ததாக வாக்குமூலம் அளித்தனர். அந்த வாக்குமூலத்தில் நானும் எனது உதவியாளரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம்.

பிறகு மேற்படி எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு அழைத்து சென்றால் அங்கு அவர்கள் பயன்படுத்திய பொருட்களை எடுத்து ஒப்படைப்பதாக கூறியதன் பேரில் காவல் துறையினர் சாட்சிகளான எங்களுடன் ரைஸ் மில் அருகே பின்பக்கமாக எதிரிகள் மறைத்து வைத்திருந்த 3 கத்திகள் மற்றும் எதிரிகள் அணிந்திருந்த இரத்தக்கரை படிந்த உடைகளை எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்கள். அதில்

சாட்சிகளாக நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம்.

அன்றைய தினமே மாலை 05.00 மணிக்கு மஞ்சாம்பாடி இரயில்வே கேட் அருகே காவல் துறையினர் எங்களை அழைத்தன் பேரில் நானும் உதவியாளரும் உடன் சென்றோம். அந்த இடத்தில் 3 நபர்கள் கீழ்வெங்கடாபுரத்தை சேர்ந்த சதிஷ், தீனதயாளன் மற்றும் 1 நபர் ஆகியோர்களை வழக்கு சம்பந்தமாக போலீசார் எங்கள் முன்னிலையில் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். மேற்படி நபர்கள் 6 நபர்களாக சேர்ந்து பாரதிதாசனை கொலை செய்ததது சம்பந்தமாக வாக்குமூலம் அளித்தனர். அவர்கள் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்துக்கொண்டார்கள் அதில் சாட்சியாக நாங்கள் கையொப்பம் செய்தோம்.

அவர்களிடமிருந்து சம்பவத்தின் போது அவர்கள் அணிந்திருந்த இரத்தக்கறை படிந்த துணியை எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் எனது கிராம உதவியாளரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் எதிரிகள் 1.தமிழ்செல்வன், 2.சேதுபதி, 3. ஆனந்தகுமார், 4.லோகேஷ் 5. தீனதயாளன் மற்றும் 6.சதிஷ் ஆகியோர்களின் ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான் அவைகள் முறையே **அதசாஆ.7** முதல் **அதசாஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் அவைகள் முறையே **அதசாஆ.13** மற்றும் **அதசாஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் இரத்தக்கறை படிந்த 3 பட்டா கத்திகளை தான் எதிரிகள் எங்கள் முன்னிலையில் எடுத்து ஆஜர்படுத்தியவை ஆகும் அவைகள் முறையே **சா.பொ.1** முதல் **சா.பொ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் இரத்தக்கறை படிந்த 1.மஞ்சள் சிவப்பு கலந்த முழுக்கை T – shirt ஒன்று, 2.சிவப்பு கலர் வெள்ளை கோடுப்போட்ட முழுக்கை சட்டை ஒன்று, 3.வெளிர் மஞ்சள் முழுக்கை சட்டை ஒன்று ஆகியவை எங்கள் முன்னிலையில் 1ம் எதிரி மூலம் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களாகும் அவைகள் முறையே **சா.பொ. 4** முதல் **சா.பொ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும் எதிரி லோகேஷ் என்பவரிடமிருந்து இரத்தக்கறை படிந்த 1.மெருண் கலர் வெள்ளை பூப்போட்ட முழுக்கை சட்டை ஒன்று, 2.வெள்ளை சிமெண்ட கலர் கலந்த ரவுண்டு நெக் T–shirt ஒன்று, 3.சிமெண்ட் கலர் அரைக்கை சட்டை ஒன்று, ஆகியவற்றை எங்கள் முன்னிலையில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களாகும். அவைகள் முறையே **சா.பொ. 7** முதல் **சா.பொ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் எங்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**எதிரிகள் 1 முதல் 6 தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடைபெற்ற நேரம் நாடு முழுவதும் கொரோனா பாதிப்பால் பாதிக்கப்பட்டிருந்தது என்று சொன்னால் சரிதான். அந்த சமயத்தில் எந்த ஊரிலும் திருவிழா நடைபெற அனுமதி வழங்கப்படவில்லல என்றும் முக்கியமாக கீழ் வெங்காடாபுரத்தில்

திருவிழா நடைபெற அனுமதி வழங்கப்பட்வில்லை என்று சொன்னால் சரிதான்.

அதே போல் பொது மக்களும் வெளியூருக்கு செல்ல தடை விதிக்கப்பட்டிருந்தது என்று சொன்னால் சரிதான். சம்பவ நடைபெற்றதாக கூறும் சமயத்தில் நான் எனது வீட்டில் இருந்தேன் என்று சொன்னால் சரிதான். நான் காஞ்சிபுரத்தில் இருந்தேன்.

நான் கிராம நிர்வாக அவலர் என்பதை நிரூபிக்க ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரியவில்லை என்றும் போலீசாரால் உருவாக்கப்பட்ட சாட்சி என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடைபெற்ற 2ம் நாள் போலீசார் என்னை தொடர்பு கொண்ட போது நேரம் மதியம் 12 மணிக்கு மேல் தான். என்னை தொடர்பு கொண்ட போலீசார் பெயர் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை ஆனால் நெமிலி காவல் நிலையத்தில் இருந்து தான் தொடர்பு கொண்டார்கள் என்னை தொடர்பு கொண்ட காவலர் பதவி பற்றி எனக்கு தெரியாது.

என்னை தொடர்பு கொண்டு ஆட்டுப்பாக்கம் பேருந்து நிறுத்தத்திற்கு வரச்சொன்னார்கள். ஆட்டுப்பாக்கம் பேருந்து நிறுத்தம் எங்குள்ளது என்றால் அரசு கலைக் கல்லூரி அருகே என்னை வரச்சொன்னார்கள். நான் காஞ்சிபுரத்தில் இருந்து தகவல் கிடைக்கபெற்று 10 நிமிடத்தில் கிளம்பினேன். எனக்கு சொந்தமான இரு சக்கர வாகத்தில் தான் மேற்படி இடத்திற்கு சென்றேன்.

நான் மட்டும் தான் அங்கு சென்றேனா என்றால் எனது உதவியாளரும் என்னுடன் வந்தார். போய் சேரும் போது நேரம்

எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் 12.30 மணி இருக்கும். அங்கு நாங்கள் சென்ற போது காவல் ஆய்வாளரும் மற்றும் 3 போலீசாரும் இருந்தனர். போலீசார் கையில் ஏதாவது பொருட்கள் வைத்திருந்தாரா என்றால் லேப்டாப் வைத்திருந்தார்கள்.

போலீசாரை தவிர வேறு யார் யார் இருந்தார்கள் என்றால் 3 நபர்கள் இருந்தார்கள். அங்கிருந்த 3 நபர்களை போலீசார் கைது செய்தார்களா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. காவல் நிலையத்திற்கு மேற்படி நபர்களை ஜீப்பில் அழைத்து சென்றார்கள். காவல் நிலையத்திற்கு செல்லும் போது நேரம் எவ்வளவு என்றால் நான் அங்கு செல்லவில்லை.

எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள விவரங்களை படித்து பார்த்து தான் நான் கையொப்பம் இட்டேன். நான் செல்வதற்கு முன்பாகவே போலிசார் ஒப்புதல் வாக்குமுலங்களை தயார் நிலையில் வைத்திருந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல நான் சென்ற பிறகு தான் அவைகள் தயார் செய்யப்பட்டது.

மாலை மீண்டும் என்னை போலீசார் தான் தொடர்பு கொண்டு வரச்சொன்னார்கள். முதலில் வாங்கிய ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள கையொப்பங்களை கையொப்பம் இட்ட பிறகு தான் நான் எனது அலுவலகத்திற்கு சென்றேன். நான் கூறுவது தவறு என்றும் மதியம் எதிரிகள் யாரும் என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலங்கள் கொடுக்கவில்லை என்றும் நான் அவைகளில் கையொப்பங்கள் இடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

மதியம் எத்தனை மணிக்கு போலீசார் ஒப்புதல் வாக்கு

மூலங்களை பதிவு செய்ய ஆரம்பித்தார்கள் என்றும் யாருடைய வாக்குமூலம் முதலில் பதிவு செய்யப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியவில்லை. முதல் வாக்குமூலம் சுமார் 12 முக்கால் மணிக்கு ஆரம்பித்து 3 வாக்குமூலங்களும் சேர்த்து அரை மணிநேரத்தில் பதிவு செய்யப்பட்டது. அவைகளை கையில் எழுதினார்களா மடிக்கணினியில் பதிவு செய்தார்களா என்றால் போலீசார் தான் மடிக்கணினியில் தட்டச்சு செய்தார்.

கிட்டதட்ட மதியம் 1 முதல் 1.30 மணிக்குள் ஒப்புதல் வாக்குமூலங்கள் பதிவு செய்து முடிக்கப்பட்டது. அதை முடித்து நான் கீழ்வெங்கடாபுரம் அலுவலகத்திற்கு சென்று விட்டேன். அதன் பிறகு போலீசார் மீண்டும் மாலை தான் அழைத்தார்கள். மாலை அழைத்த போலீசாரின் பதவி பற்றி எனக்கு தெரியாது. மாலை அழைத்த போது நேரம் 04.30 அல்லது 5.00 மணியிருக்கும்.

அந்த நேரத்தில் என்னை மஞ்சம்பாடி என்ற ஊருக்கு வரச்சொன்னார்கள். அது எந்த எல்லைக்கு உட்பட்டது என்றால் அரக்கோணம் எல்லைக்கு உட்பட்டது தான். அங்கு நாங்கள் போய் சேர்ந்த போது மாலை சுமார் 05.00 முதல் 05.15 மணியிருக்கும் அப்போது போலீசார் 4 நபர்களும், 5 முதல் 6 பொதுமக்களும் இருந்தார்கள். அங்கு பிரச்சனைக்கு உட்பட்ட 3 நபர்கள் இருந்தார்கள் அவர்கள் யார் யார் என்று பெயர்கள் குறிப்பிட்டு கூறமுடியுமா என்றால் லோகேஷ், தீனதயாளன் மற்றொருவர் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை.

நான் சென்ற பிறகு அவர்களை கைது செய்து போலீசார் அழைத்து சென்று விட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல அதற்கு

முன்பு அந்த இடத்திலேயே போலீசார் எதிரிகளின் வாக்குமூலங்களை பதிவு செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலம் எத்தனை மணிக்கு துவங்கி எத்தனை மணிக்கு முடிக்கபட்டது என்றால் மாலை 5.15 மணிக்கு துவங்கி மாலை 06.00 மணிக்கு முடிக்கப்பட்டது.

அதன் பிறகு நான் தாலுக்கா அலுவலகம் சென்று விட்டேன். அங்கிருந்து பனப்பாக்கத்திற்கு உள்ள வீட்டிற்கு நான் சென்றேன். எங்கள் முன்னிலையில் கைப்பற்றப்பட்ட கத்தி எந்த வகையை சார்ந்தது என்றால் கத்திதான். அது வெட்டு கத்தியா பட்டா கத்தியா என்றால் பட்டா கத்திகள் தான். பட்டா கத்தி என்பதன் விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கத்திகள் எதுவும் பட்டா கத்திகள் இல்லை என்று சொன்னால் சரியல்ல அவைகள் பட்டா கத்திகள் தான்.

என்னிடம் காண்பிக்கப்படும் கத்திகள் கத்திகளே இல்லை என்றும் போலீசார் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவைகள் என்றால் சரியல்ல என்னை பொருத்தவரை அவைகள் கத்திகள் தான். என்னிடம் காட்டப்படும் பொருட்கள் போலீசாரால் தயார் செய்யப்பட்ட தகடுகள் என்றும் அதனால் தான் அவைகளில் கைப்பிடிகள் கூட இல்லை என்று சொன்னால் சரியல்ல.

கைப்பற்றுதல் மகஜரில் கத்தியின் அளவுகள் பற்றி கூறவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி கைப்பற்றப்பட்ட துணிகள் எந்தெந்த எதிரிகளால் எடுத்து ஆஜர் படுத்தப்பட்டவை என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. போலீசார் கேட்டுக்கொண்டதன்

பேரில் காவல் நிலையத்தில் பொய்யாக தயார் செய்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் கையொப்பம் இட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

வாக்குமூலம் பதிவு செய்யப்படும் போது போலீசாரிடம் லேப்டாப் தவிர வேறு என்ன உபகரணம் போலீசாரிடம் இருந்து என்றால் வேறு எதுவும் இல்லை. அவ்வாறு இருக்கும் போது போலீசார் காவல் நிலையத்தில் தான் பிரிண்ட் எடுத்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்று சொன்னால் சரியல்ல, போலீசார் அருகில் சென்று பிரிண்ட் அவுட் எடுத்து வந்து தான் சம்பவ இடத்தில் கையொப்பம் பெற்றனர். நான் கூறுவது பொய் என்றும் அப்போது கொரோனா பாதிப்பால் கடைகள் எல்லாம் அடைக்கப்பட்டிருந்தது என்று சொன்னால் சரியல்ல போலீசார் எந்த இடத்திற்கு சென்று பிரிண்ட் எடுத்துவந்தார்கள் என்று எனக்கு தெரியாது சம்பவ இடத்தில் தான் நான் கையொப்பம் இட்டேன்.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.28 15:13:17 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.